# அன்பு



தமிழ்நெஞ்சம்

# வணக்கம் நண்பர்களே

கவிதை எழுதுவதற்கு எத்தனையோ வடிவங்கள் இருந்தாலும் மரபு வடிவம் என்பது மாறாத ஒரு வடிவம்; மரபு அழிந்துவிட்டது; அது திரும்ப எழாது; புதுக்கவிதை போன்ற புதிய வடிவங்கள் தோன்றிவிட்டன. நம் எண்ணப்படி எழுதலாம் என்று எண்ணியவர்களின் எண்ணங்கள் தவறு என நிரூபிக்கும் வகையில் உருவான தொகுப்பே இது. நிலாமுற்றத்தில் மீண்டும் மரபுக்கவிதைப் பயிற்சியைத் தொடங்கியபோது கலந்து கொண்ட பாவலர்களின் எண்ணிக்கையே ஒரு புத்துணர்ச்சியைத் தந்தது. மரபின்மேல் அவர்கள் வைத்துள்ள பற்றையும் நம்பிக்கையையும் காட்டும்விதமாக அது அமைந்தது. அன்பு என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்ட 136 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பே இது. அன்பு குறித்த ஒரு கவிதைக் கதம்பம் இது.  படிக்கப் படிக்கத் தேனூறும். படித்து முடித்தபின் வியப்பூறும் விதமாக அமைந்துள்ள இத்தொகுப்பை ஐயா தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் மிக அழகாக வடிவமைத்துள்ளார்கள்.

இராம வேல்முருகன் வலங்கைமான்

# அன்பு

தொகுப்பு

**இராம.வேல்முருகன் வலங்கைமான்**

**தமிழ்நெஞ்சம்**

59, rue des Entrechats, 95800 Cergy - France

நூல்பெயர்  : அன்பு

வகை : மரபு - ஆசிரியப்பா

தொகுப்பு : **இராம.வேல்முருகன் வலங்கைமான்**

பதிப்பு : **தமிழ்நெஞ்சம் அமின்**

முதல் பதிப்பு : நவம்பர் 2022

பக்கங்கள் : 56



# உள்ளே...


1. கோ. அருச்சுணன்
2. தமிழ்பாரதி
3. செபா சவிரிமுத்து
4. செல்வராஜா சுதாகரன் - வயலூரான்
5. இரா. ச. பத்மநாபன், தஞ்சாவூர்
6. இராமசாமி நாராயணன், பவானி.
7. திலகவதி பாஸ்கர்
8. மதுரை குமரன்
9. செல்லமுத்து பெரியசாமி
10. து. சுதா கத்தரிப்புலம்
11. க.மகராசி
12. புவனா சற்குணம், கனடா
13. பொ.முத்துராக்கு
14. ந. இரா. இராசகுமாரன், கோவை
15. தஞ்சை கோ பாலசுப்ரமணியன்
16. சுமதி சிவக்குமார். கள்ளக்குறிச்சி
17. சு. யோ. முத்தமிழ்ச்செல்வி நத்தம்
18. மருத்துவகவிஞர் பெ.தி.சுகுமார்
19. ரா. ரேகா ராஜகுமார்
20. மகேசுவரி முருகையா
21. வ. பழனி, புதுச்சேரி
22. செந்தமிழ், இலங்கை
23. கு. கதிரேசன்
24. மு. வா. பாலாஜி, ஓசூர்
25. பாவலர் தாழை ந இளவழகன், மணப்பாறை

26. பால் பேரின்பநாதன்
27. கவிஞர் கேசவ தாஸ் சுசீந்திரம்
28. திருமதி செ.தெய்வேந்திரமூர்த்தி. பரந்தன். இலங்கை
29. கெங்கை பாலதா
30. தென்பரை இராக.பாற்கர்
31. ஜெயா உதயா
32. வள்ளல் இராமமூர்த்தி
33. ஜெ முகம்மது ஹபீபுல்லா
34. ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்
35. கவிஞர் வீக பொன்னையா, புதுக்கோட்டை
36. கவிஞர் ஆர் குணசேகரன்
37. வைர. வசீகரன்
38. தம்பலகமம் கவிதா
39. பாளை பால்கி
40. தங்க. ஜான்பீட்டர்
41. அகிலா திருமேனி திருமறைக்காடு
42. பவானி ரெகு
43. இரா இரத்தினகுமார்
44. தகடூர் தமிழ்முருகன்
45. வீரா பாலச்சந்திரன்
46. செண்பக ஜெகதீசன்
47. பொன். இளையகுமார்
48. பா. உமா முருகானந்தம், உள்ளிக்கோட்டை
49. கண்ணதாசமுருகன்
50. குளோரிசக்தி, கரூர்

51. தமிழ்திரு கவிமழை
52. தென்றல் கவி
53. ஜெனனி. மோ
54. கி.மணிவாசகன் அன்னூர், கோயம்புத்தூர்
55. இளவல் ஹரிஹரன், மதுரை
56. பால. கார்த்திகேயன், தாராபுரம்
57. இரா. வெங்கடாசலம்
58. மா. பாலசுந்தரம்
59. தென்பரைத் தமிழன்பன்
60. பென்ஸ் பிரான்சிஸ்
61. ஜெ. வசந்தி பளை
62. கிண்ணியா சபீனா
63. மு. இரசியாபேகம்
64. வா. சண்முகம்
65. சிந்தனைபாரதி மாரி. வசந்த குமார், திருச்சி
66. உமாஜெம்புநாதன்
67. மைதிலி தயாளன்
68. தனராஜ் பாப்பணன், கோவை
69. மருத்துவர் தேவி
70. ப. முருகன் யோகீஸ்வரர்
71. பரமேஸ்வரிசண்முகம்
72. சுப. சாவி
73. மு. இரெ. முத்து
74. இரா. கவிதா, திண்டுக்கல்
75. கமலா ஜெயபாலன்

76. இந்திராணி தங்கவேல்
77. ஒசூர் மணிமேகலை
78. நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்
79. பாரதி கரு. இளஞ்செழியன்
80. இளையதீபன் மகாலிங்கம்
81. ஜெகதாம்பாள் ராஜீவன்
82. கவிஞர் செகவான், மதுரை
83. ம. பழனிச்சாமி
84. பழனி அழகு
85. யே. யூடி எமெறென்சியா
86. மாலதி திரு
87. காவத்தையூர் பழனியாண்டி ராஜா
88. த. புவனேசுவரி
89. பாக்கியலட்சுமி
90. அ. வேளாங்கண்ணி
91. எம். நூஹுல்லா
92. கந்தநாதன், மஸ்கட்
93. தம்பித்துரை குணத்திலகம்
94. வ. க. கன்னியப்பன்
95. சுகுமார் கவி
96. ஆ. முருகேசுவரி
97. சேந்தன்குடிச் செந்தமிழாழன், புதுக்கோட்டை
98. பைந்தமிழ்ப்பாமணி ஜோதிபாஸ் முனியப்பன்
99. கோபால் சத்தியமங்கலம்
100. லீலா லோகநாதன்

101. கு. மலர் செல்வி
102. வாசன் சாவி, சென்னை
103. மைக்கேல்ராஜ்
104. கா. கி. சந்திரசேகரன்
105. சாய்ரேணு சங்கர்
106. திருமதி மாலினி கெனடி
107. இரா. பேச்சியம்மாள், கரிசல் கானம்
108. செ. நிறைமதி, மதுரை
109. க.தங்கவேலு.கிருட்டிணகிரி
110. கண்ணன் நடராஜன்
111. மங்களரூபி ஜெகதீஸ்வரன்
112. முருகன் ஊர்க்காவலன்
113. இரமேசு ரவிச்சந்திரன், சென்னை
114. த. கி. ஷர்மிதன், இலங்கை
115. முத்துராமன்
116. ஔவை
117. வேங்கடலட்சுமி ராமர்
118. சசி முத்து கருமாத்தூர், மதுரை
119. மீராஸ்ரீ
120. தி. இராஜபிரபா
121. ஜெயசக்தி பிரபாகரன்
122. நாகை குமரன்
123. புஷ்பகலா ரவீரதன்
124. சிவம் முத்து
125. ந. மணிமாறன்

126. மகேஸ்வரி கிருஷ்ணசாமி
127. பா. ச. கண்ணன்
128. பாவலர் பஃக்ருத்தீன், பரங்கிப்பேட்டை
129. கவிஞர் கவிதா அசோகன், திருச்சி
130. நளினா கணேசன்
131. கோவிந்தம்மாள் இரத்தினம்
132. சுப. கல்யாணம்
133. சு.பசுங்கிளி. திருநெல்வேலி
134. பேனாவின் தோழி பிந்து சத்தியமங்கலம்
135. இராம வேல்முருகன் வலங்கைமான்
136. தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு

1

அன்பு கொண்ட அகமா யிருப்போம்
என்றும் தமிழாய் எண்ணம் சிறப்போம்
முன்னம் முளைத்த முத்தமிழ் மொழியே
இந்நிலத் தமிழன் எடுத்த விழியே.

கோ. அருச்சுணன்

2

அன்பை  விதைத்தே  அகிலம் சமைப்போம்
என்றும் மாறாமல் எப்போதும் காப்போம்
புன்னகைப் பூக்களை புவிதனில்   தருவோம்
எண்ணில் அடங்கா இன்பம் பெறுவோமே...

தமிழ்பாரதி

3

அன்பு செய்ய அறிவு வளரும்
இன்பம் அதனால் இதயத்தில் பெருகும்
துன்பம் நேர்தலைத் தூர விலக்கும்
நன்மன முடையர் நாளும் மகிழ்வரே

செபா சவிரிமுத்து

4 .

அன்பு காட்டி அகிலம் வெல்வோம்
என்றும் பிறரை ஏற்றியே மகிழ்வோம்
உண்மை அன்பால் உலகை ஆண்டிட
மண்ணில் எமது மகிமை உயருமே.

செல்வராஜா சுதாகரன் - வயலூரான்

5.

வாடிய பயிரால் வாடிய வள்ளலார்
நாடிய நலிந்தோர் நட்பாய் தெரசா
ஓடிய தேரை உவந்தநல் பாரி
கூடிய உருவாய் கொண்டவள் தாயே!

இரா.ச. பத்மநாபன், தஞ்சாவூர்

6

அன்பின் முழக்கம் அகிலம் சிறக்கும்
இன்பம் நிலைக்கும் இதயம் மணக்கும்
என்றும் வாழ்வில் ஏற்றம் இருக்கும்
அன்பின் முறையில் அனைத்தும் நிறைவே!

இராமசாமி நாராயணன், பவானி

7

அன்பே என்றும் அரணாய்க் காக்கும்
இன்பம் வழங்கி இனிமை கூட்டும்
துன்பம் நீக்கித் துணிவை உயர்த்தும்
கன்னல் மொழியின் கனிவின் மருந்தே

திலகவதி பாஸ்கர்

8

மலர்ந்தே வீசும் மணமும் சுகமே
கலந்தே சிறக்கும் கனிவி லில்லமே
பலரும் மறக்க பண்பில் தளர்வே
உலகோர் போற்ற உயரு மன்பே

மதுரை குமரன்

9

அன்பு நம்மை அறவழி நடத்தும்
துன்பம் தொலைத்துத்  தூர விலக்கும்
இன்பம் தனையே இரட்டிக்கச் செய்யும்
முன்னே நின்று மூவுலகு(ம்) ஆளுமே!

செல்லமுத்து பெரியசாமி

10

உள்ளம் உருகி உணர்வில் கலக்க..
கள்ளம் இல்லா கனவில் மிதக்க.
பள்ளம் பறிக்காத பண்பில் நுழைய..
வள்ளல் மனத்தால் வளரும் காதலே

து. சுதா கத்தரிப்புலம்

11

அன்பில் உயர்வோம் ஆளுமை கொள்வோம்
என்பில் இயைந்திட இன்முகம் காண்போம்
பன்முகத் திறனைப் பாரினில் விதைக்க
இன்பம் சூழ்ந்தே என்றும் வாழ்வோமே

க. மகராசி

12

அன்பு செய்தே உலகை ஆள்வோம்
இன்ப வாழ்வை இனிதாய் வாழ்வோம்
எண்ணம் யாவும் எளிதாய் வென்றிட
வண்ணம் கொண்ட உலகைக் காப்போமே

புவனா சற்குணம், கனடா

13

அன்பு செலுத்துதல் அனைத்திலும் உயர்ந்தது/
நன்மை அளிக்கும் நல்வழி நடத்தும்/
துன்பம் வந்திடத் துணையாய் நிற்கும்/
என்றும் அன்பே ஏற்புடை நெறியே.

பொ. முத்துராக்கு

14
அன்பின் ஆழம் அறிவார் யாரோ
துன்பம் விலகியே துலக்கம் காணுமோ
இன்பம் பெற்றிடும் இதயம் ஏங்குதே
இன்னல் தீர்க்கும் இனியவர் வரவே

ந. இரா. இராசகுமாரன், கோவை.

15

அன்பை விதைத்தால் அகிலம் போற்றுமே
இன்பம் தந்து இன்னல் விலகுமே
உன்னால் முடியும் உதவிகள் செய்தால்
நன்மை வளரும் நானிலம் வாழ்த்தும்

தஞ்சை கோ பாலசுப்ரமணியன்

16

அன்பே என்றும் ஆளும் உலகை
இன்பம் சேர்க்கும் இன்றே அன்றோ
துன்பம் விலகி தூர நகரும்
என்றும் நாமும் இன்புற்று வாழவே

சுமதி சிவக்குமார். கள்ளக்குறிச்சி

17

அன்பெனும் ஆயுதம் அகிலத்தை வெல்லும்
இன்முகம் கொண்டு இனிமையாகப் பேசினால்
வன்மம் அழிந்து வாழ்வு சிறக்கும்
தன்னலம் கருதாது தரணியில் உயர்வோமே!

சு. யோ. முத்தமிழ்ச்செல்வி நத்தம்

18

அன்பும் பண்பும் அகத்தில் கொள்வோம்
துன்பம் அகலும் துயரம் குறையும்
இன்பம் நிறையும் இனிமை பிறக்கும்
நன்மை பெருகும் நலமும் சிறக்குமே

மருத்துவகவிஞர் பெ. தி. சுகுமார்

19

அழகிய கனியே அன்பே உன்னை
பழகியே பார்த்தேன் பாவை யிடமே
பழக்கம் எல்லாம் பண்பாய் மாறிட
வழக்கம் ஆனதே வஞ்சியைத் தொடர

ரா. ரேகா ராஜகுமார்

20

அன்பெலாம் ஒன்றே அனைத்தும் பிறப்பில்/
தன்னால்  இயன்ற தர்மம் செய்திடு.
முன்னோர் கூற்றை முயன்றே நடப்போம்.
கரும்பின் சுவையாம் கனிந்த அன்பே

மகேசுவரி முருகையா

21

அன்பாய் இருப்பதை அனைவரும் விரும்புவர்!
வன்சொல் பேசிடும் வன்முறை எதற்கோ?
இன்சொல் பேசியே இன்பமாய் வாழலாம்!
என்றும் அன்பே எங்கும் வெல்லுமே!

வ. பழனி, புதுச்சேரி

22

அருளை வழங்கும் அறத்தை வளர்க்கும்
இருளை ஓட்டும் இன்பம் கூட்டும்
மருளும் மங்க மயக்கம் தீர்க்க
பருகும் பாகாய்ப் பயன்தரும் அன்பே!

செந்தமிழ், இலங்கை

23

அன்பு திறமை அகிலம் சுழலுமாம்
என்பு துறுப்பு எளிதென பற்றுமாம்
கன்னம் கனிய களிப்பென பார்த்திரு
என்று மதுவே எதனுடனும் சேருமே!

கு. கதிரேசன்

24

அன்பைப் பொழிந்தால் அகிலம் உனக்கே
துன்பம் எல்லாம் தூரம் ஓடுமே
இன்பம் பெருக இருக்கு வழிகளே
மென்மை காத்தால் மேன்மை வருமே

மு. வா. பாலாஜி, ஓசூர்

25

அன்பின் நெறியில் அறமே புரிவோம்
என்றும் அறிவில் எழிலாய் வளர்வோம்
குன்றாச் செல்வம் குறைவறப் பெற்று
மன்றோர் போற்ற மகிழ்வோம் தினமே

பாவலர் தாழை ந இளவழகன், மணப்பாறை

26

அன்புடை மாந்தர் அறமிகு வாழ்வை
என்றும் பற்றி எத்துயர் வரினும்
நன்றே போற்றி நெறிமிகு வழியது
நின்றே காட்டும் நிகரிலா நேர்மையே

பால் பேரின்பநாதன்

27

அன்பினால் உலகிலே அறப்பயிர் வளர்ப்போம்
நன்றி மறப்பதை நாளும் மறப்போம்
என்று மின்பமே இல்லறத் திலோங்கும்
நன்றே அமையும் நசையிலா வாழ்வே.

கவிஞர் கேசவ தாஸ் சுசீந்திரம்

28

அன்பைக் காட்டிட அனைத்தும் கிட்டும்
துன்பம் நீக்கியே துயரம் போக்கும்
நன்றாம் வாழ்வில் நலங்கள் சேர்க்கும்
இன்றே நல்குநீ இறைவனின் கொடையே!

திருமதி  செ.தெய்வேந்திரமூர்த்தி. பரந்தன், இலங்கை

29

அன்பை மனவயல் அனுதினம் வளர்க்கக்
கன்னல்  மொழியால் கனிவாய்ப் பேசி
நாளும் வாழ்ந்தால் நலத்தைப் பெறலாம்
ஆளும் அமைதி அவனியோர் கண்ணே!

கெங்கை பா லதா

30

அன்பைக் கொடுத்தே அன்பைப் பெறுவோம்
வன்மம் தவிர்த்தே வாழப் பழகுவோம்
புன்னகை யோடே பாசம் பொழிந்தால்
என்றும் வாழ்க்கை இனிதே தொடருமே!

தென்பரை இராக. பாற்கர்

31

அன்பு  மலர அறவழி   இனிதே!
இன்பம் பெருக இன்னல் அகலுமே!
பன்முக ஆளுமை பாங்குடன் வளர்த்தே!
வன்முறை இன்றி  வாழ்வோம்  நாமே.!

ஜெயா உதயா

32

அன்பை செலுத்தி அன்பைப் பெறுவோம்
இன்பம் துன்பம் இரண்டும் ஏற்போம்
இன்றும் என்றும் இனிதே சொல்வோம்
நன்மை ஒன்றே நாம்செய் வோமே !

வள்ளல் இராமமூர்த்தி

33

அன்பைப் பகிர்ந்து ஆணவம் விலக்கி
இன்பம் பெருகிட ஈகையிற் சிறந்து
நன்மைகள் புரிந்து நலமுடன் மகிழ
பொன்னென வாழ்க்கை பொலிவுறும் நிசமே.

ஜெ. முகம்மது ஹபீபுல்லா

34

மலரும்  அன்பை மண்ணில் விதைப்போம்
புலரும்  தினங்களில் புதுமைகள் காண்போம்
வன்மம்  களைந்து வாழ்ந்திடத் துணிந்து
இன்பப்  புரிதலால் இனிதாய் வாழ்வோமே

ஈச்சிலம்பற்று மதிபாலசிங்கம்

35

அன்பை விதைத்தே அறிவை வளர்த்தால்
இன்பம் நிறைந்தே இதயங் குளிரும்
அன்னை மனத்துள் அமைதி நிலவி
என்றும் வாழ்ந்தால் இனிமை தானே

கவிஞர் வீக பொன்னையா, புதுக்கோட்டை

36

உன்னை மறந்தால் உள்ளம் தாங்குமோ
கண்ணை இழந்தால் கண்விழி காணுமோ
பெண்ணே நிழலாய்ப் பெருமை சேர்த்திடு
வண்ணக் கனவின் வசந்த வாழ்வே!

கவிஞர் ஆர் குணசேகரன்

37

அன்பின் பெருமை அலசல் அருமை
அன்பின் இனிமை அறியும் தனிமை
அன்பே பெரிதாய் அலையும் பலர்க்கும்
அன்பே பெரிதாய் அமைதல் இலையே!

வைர. வசீகரன்

38

அன்பிலா அகத்துடன்  அனுதினம் வாழ்பவர்
என்புந் தோலுமே இதயமாய் உடையவர்
அன்பை பகிர்ந்தே அவனியில் வாழ்பவர்
இன்பம் கொள்வார் இனிதாய் வாழ்வரே!

தம்பலகமம் கவிதா

39

உணர்வுகள் வழியே உறவுகள் படிக்கும்
உணவினைப் போலே உள்ளத்தில் இனிக்கும்
இணங்கிடச் செய்யும் இனியவர் உறவே
சுணங்கிடா தெழுந்து சுடர்விடும் அன்பே

பாளை பால்கி

40

அன்பை வழங்கி அனுதினம் வாழ்ந்தால்
இன்பம் கிடைக்கும் இதயம் பொழிந்தால்
என்றும் மகிழ்ந்து இனிமைப் பெருக்கு
நின்றிடு உலகில் நிலவாய் சிரித்தே

தங்க. ஜான்பீட்டர்

41

அன்பே உலகின் அச்சாணி ஆகும்
நன்மையை ஒருவன் நவில்தல் அரணாம்
வன்சொல் அகற்றலே வளமான வாழ்வாம்
நன்மக்கட் கென்றும் நன்னெறி அன்பே

அகிலா திருமேனி, திருமறைக்காடு

42

அன்பே மனித அடித்தள மன்றோ
இன்முகங் காட்டி இனிமை கூட்டி
அன்பினைக் கொட்டின் அகிலம் மகிழ்ந்து
வன்மையும் மறையும் வாழ்வும் செழிக்குமே!

பவானி ரெகு

43

காசினி யாள்வோம் களங்கமி லன்பால்
மாசினைத் தவிர்த்து மண்ணைக் காப்போம்
ஆசிலாப் பணியால் அகிலம் கவர்ந்து
பேசிடச் செய்வோம் பீடுறு தமிழே

இரா இரத்தினகுமார்

44

என்பே  இல்லா இன்னுயிர் ஆயினும்
அன்பை நிதமும் அள்ளி வீசுக
இன்பம் வாழ்வில் இனிதாய்க் கூடும்
துன்பம் விலகித் தூரமாய் ஓடுமே.

தகடூர் தமிழ்முருகன்

45

எல்லோர் உள்ளமும் எளிதில் மயக்குறும்
பல்லோர் ஏத்திப் பணியும் நெறியாய்
வல்லாய் அன்பே வாழிநீ உலகில்
இல்லா விடிலோ இதயமே அறுமே.

வீரா பாலச்சந்திரன்

46

அன்பினை விதைத்தால் அறுவடை தருமே
இன்பமாய் விளைச்சல் என்பதை யுணர்ந்தே,
மன்பதை யதனில் மானிடர் தமக்குள்
அன்பு காட்டுவீர் அதன்பலன் பெறவே

செண்பக ஜெகதீசன்

47

அன்பின் வலிமையில்  அறிவும் தோற்குமே
துன்பம் கொண்டாலும்  துணையாய் நிற்குமே
தூய நெறிகளைத் தூண்டிட பெருகுமே
நேயம் பெருகுமே நிம்மதி விளையுமே!

பொன். இளையகுமார்

48

அன்பெனும் பண்பை அணிகல னாக்குவோம்
இன்பம் நிறைந்த இல்லறம் அமைப்போம்
தன்னலம் கருதாத் தகைமை எண்ணம்
வன்மம் இல்லா வாழ்வை தருமே

பா. உமா முருகானந்தம், உள்ளிக்கோட்டை.

49

இன்னம் மயக்க இசைப்பென்? எதற்காய்?
மன்னன் நிலையுள் மறையும் நிலவாய்!
இன்னலைப் போக்கும் இயலெது கூறாய்?
முன்தொழு அன்பால்! முளைக்கும் கதிரே!

கண்ணதாசமுருகன்

50

அன்பே யாரும் அண்டிடும் இறையாம்
புன்கணீர் துடைத்துப் பொன்னென மிளிரும்
குன்றுதல் அறியாக் கோட்டையாம் அதனால்
இன்பம் பெற்றுநாம் எழிலுறு வோமே!

குளோரிசக்தி  கரூர்

51

அன்பின்  உயிராம் அறிவின்  சிறப்பும்
பண்பில்  வளர்ந்து பரிணாமம்  கொள்ளும்
என்னை  மறக்க  இதயம்  இருக்கா
உன்னை  அறிவேன்  உயிரே  உணர்வாய்

தமிழ்திரு கவிமழை

52

அன்பொன் றேதான் ஆருயிர் மருந்தாம்
இன்பம் அளிக்கும்; இதயம் மகிழ
துன்பம் துடைக்கும் சுற்றம் தழுவும்
என்றும் துணையாய் இருப்பதும் அன்பே

தென்றல்கவி

53

அன்பின் பிணைப்பில் அகிலமே இயங்கும்
இன்பம் கொண்டே இனிமையாய் வாழ்வோம்
துன்பம் விலகித் தூர மாகிட
இன்முகம் வாழ்வில் இருந்திட வேண்டுமே!

ஜெனனி. மோ

54

கண்டாய் எனையே காதலின் கடவுளாய்
எண்ணம் நிறைய என்னைத் தந்தேன்
வண்ணம் பலவாகி வசந்தம் வீசுமே
திண்ணம் அதுவே திருமணம் கூடுமே

கி. மணிவாசகன் அன்னூர், கோயம்புத்தூர்

55

நெஞ்சம் நெகிழ நினைவில் மகிழக்
கொஞ்சம் காதல் கொஞ்சும் பார்வை
இதுவே போதும் இனியது வாழ்க்கை
எதுவும் நடக்கும் இமைத்திடும் நொடியே

இளவல் ஹரிஹரன் மதுரை

56

அன்பை நாடினால் அற்புதம் நிகழும்
துன்பம் விலகும் தூயநெறி வந்திடும்
உன்னை அறிந்தே உலகை வெல்வாய்
தன்மை இருந்தால் தெளிவாய் உயர்வோமே

பால. கார்த்திகேயன், தாராபுரம்

57

அன்பு கொண்ட அழகிய உள்ளம்
துன்பம் தொலைக்கும் தோழமை கொள்ளும்
பண்பு நிறைந்தோர் பந்தம் கொள்ள
என்றும் வாழ்வில் இன்பமே காணுமே.

இரா. வெங்கடாசலம்

58

உள்ளத்தில் சுரந்த உணர்வு அலைகள்
கள்ளம் இல்லாக் கனிவைத் தந்தது
துள்ளும் அன்பும் தூய பாலாய்ப்
பள்ளம் நிறைத்துப் பாங்காய் மாற்றியதே/

மா. பாலசுந்தரம்

59

எல்லா உயிர்களும் இன்புறும் போது
எல்லை யில்லா இதயமும் மகிழும்
நல்லவர் போற்றும் நட்பின் தூய்மை
வல்லமை யாலே வான்புகழ் எய்துமே!

தென்பரைத் தமிழன்பன்

60

இரக்கம் என்பதே இறைவன் பழக்கம்
அரக்கர் குணமோ அழிந்து போகும்
மறவர் நெஞ்சில் மலரும் அன்பில்
பறவை போலப் பறக்கும் பகையே

பென்ஸ் பிரான்சிஸ்

61

இதயம் குளிர இடர்கள் களையும்
உதய மாகும் உணர்வை உலுக்கும்
குதர்க்க மொழித்துக் குற்றம் மறக்கும்
இதயம் மகிழ்தல் இனிய அன்பே....

ஜெ வசந்தி பளை

62

அன்பிற் கலந்ததும் ஆனந்தம் காண்பர்
துன்பம் மறக்கத் துள்ளியே மகிழ்வர்
இன்பம் பொங்க இனிமையில் திளைப்பர்
என்றுமே அன்பினால் இதயம் இணைவரே!

கிண்ணியா சபீனா

63

அன்பைக் காண  ஆழம் தோண்ட
இன்ப ஊற்றை இதயம் காட்டும்
வென்று மனதை வியப்பில் கட்டி
நின்று நிறைவில் நிலைக்கும் அன்பே!

மு. இரசியாபேகம்

64

அன்பை விதைத்தே அகத்தை நிறைப்போம்
நன்மை கிடைக்க நன்றாய் வாழ்வோம்
என்றும் நட்பில் ஏற்றம் காண்போம்
வன்முறை இன்றி வாழ்வோம் நாமே.

வா. சண்முகம்

65

இன்பம் கனிந்தால் இனிக்கும் பழமாய்த்
துன்பம் கலைந்து தொடரும் உறவே
பண்பாய் நாமும்  பழகிடும் விதங்கள்...
அன்பை நிதமும்  அடர்ந்து தருமே...

சிந்தனைபாரதி மாரி. வசந்த குமார், திருச்சி

66

அன்பெனும் சொல்லே அழகிய சொல்லாம்
இன்னல் நீக்கி இன்பம் தருமே
நன்கு குழைத்த நட்புடைச் சொல்லும்
உன்னை மாற்றும் உயர்ந்த நிலைக்கே

உமா ஜெம்புநாதன்

67

அன்பைக் கொண்டே அகிலம் தழைக்கும்
இன்னல் அதையும் இதயம் பொறுக்கும்
நன்மை தீமை நயமாய் உணர்ந்திடில்
வன்மம் தொலைத்து மண்ணும் செழிக்குமே..

மைதிலி தயாளன்

68

முகத்தி லாயிரம் முழுநில வாக
அகத்தி லூறும் அன்பே தோன்றும்
செகத்தி லிதுபோல் சிறந்த செல்வம்
நிகரென் றெதுவும் நின்றது மிலையே !

தனராஜ் பாப்பணன் கோவை

69

அன்பால் நாமும் அகிலம் அளப்போம்
இன்பம் நமக்கும் இயல்பாய் அமையும்
துன்பம் துயரம் தொலைந்து போகும்
நன்மைப் பலவும் நாடி வருமே

மருத்துவர் தேவி

70

இன்பம் தந்திடும்  இருமனம் கலந்திடும்
அன்பே உலகின் அடிக்கல் ஆயது
துன்பம் போக்கிடும்  தூய பண்பினால்
வன்பகை அகன்றிடும்  வாய்மை காணே.

ப . முருகன் யோகீஸ்வரர்

71

அன்பைச் சுமந்தே அகிலம் வெல்வோம்
அன்றும் இன்றும்  அன்பே ஆள
துன்பம் கண்டே துவள வேண்டாம்
என்றும் நமக்கெலாம் இறைவன் துணையே
.
பரமேஸ்வரி சண்முகம்

72

வித்திடுக அன்பை விளைத்திடுக இன்சொல்
சத்தெனப் பண்பொடு சலியா வாழ்வின்
சொத்தென யெண்ணிடச் சொந்தமு முலகில்
பத்தின் மடங்கெனப் பெருகும் மதிப்புமே.

சுப. சாவி.

73

நெஞ்சம் நெகிழ்ந்தே நயமாய்ப் பழகிக்
கொஞ்சும் தமிழால் கனிவாய் உரைத்துப்
பஞ்சின் மென்மைப் பண்பால் ஏற்றே
அன்பாய் வாழ்ந்தால் ஆக்கம் கூடுமே.

மு. இரெ. முத்து

74

அன்புடை நெஞ்சில் ஆணவம் அழியும்!
தன்னை உணர்ந்து தவறைத் திருத்தும்!
வன்மம் மறைந்து வள்ளண்மை பெருகும்!
மன்பதை எல்லாம் மகிழ்ந்து திளைக்குமே!

இரா. கவிதா, திண்டுக்கல்

75

அன்பின் வடிவம் அன்னை யுருவம்
துன்பம் அகற்றித் துணையாய் யிருப்பாள்
வன்மம் போக்கி வழியும் காட்டி
நன்றாய்ப் பண்பை நல்கிடு வாளே

கமலா ஜெயபாலன்

76

அம்மா என்னும் அன்பில் விளைந்து
நம்மால் முடியும் நலத்தை நல்கி
எம்மான் அவனை என்றும் தொழுது
சும்மா தந்தால் சுகமே அன்றோ..

இந்திராணி தங்கவேல்.

77

அன்பே வெல்லும்! ஆளும் உலகை!
என்றும் நிலைக்கும் இனிமை உவகை!
உள்ளம் தன்னில் உணரும் அன்பை
அள்ளித் தருவோம் அகிலம் உய்யவே!

ஓசூர் மணிமேகலை

78

கன்னல் மொழியால் கவலை தீர்ப்போம்
இன்முகத் தாலே இதயம் காப்போம்
வன்மம் மறந்தே வாழ்வோம் நாமே
இன்னல் தீர்க்க இன்பம் தருமே!

நிறைமதி நீலமேகம், பெண்ணாடம்

79

அன்பெனும் வித்தை அனுதினம் விதைத்து
மன்பதை எங்கும் வளர்ந்திடச் செய்வோம்.
துன்பம் வரினும் துணையாய் இருப்போம்
இன்ப வழியினில் என்றும் இணைந்தே

பாரதி கரு. இளஞ்செழியன்

80

அன்பெனும் விளக்கை யகத்தி லேற்றிடத்
துன்பெனு மிருளைத் துடைத்திட லெளிதே
இன்பெனும் கரையி லிருக்கலா மினிதே
வன்பெனு மாயுதம் வேறுயா துரைப்பீரே.

இளையதீபன் மகாலிங்கம்

81

அன்பை விதைத்தே அமைதி பெறுவோம்
கன்னல் மொழியால் கனிவு காண்போம்
இன்னல் களையவே இன்பம் பெருகும்
வன்மம் மறந்தே வளமும் காண்போமே

ஜெகதாம்பாள் ராஜீவன்

82

உள்ளம் பிறந்தே யுறவிற் கலந்திடும்
கள்ள மில்லாக் காதல் அன்பாம்!
எல்லா உயிர்க ளிடத்தும் மலர்ந்தால்
எல்லை யில்லா இன்பந் தருமே!

கவிஞர் செகவான் மதுரை

83

தள்ளை யினன்பு தள்ளா டும்வரை/
உள்ளத் துவகை உணர்வில் கலந்து/
கள்ளம் இல்லா காதலில் உருகி/
மள்ளல் காட்டிடும் மாநிலம் முழுதுமே/

ம. பழனிச்சாமி

84

என்பிலா இதயத்துள் இருக்கின்ற இருளினை
அன்பெனும் அருளொளி அகற்றுமே அதன்பின்
நண்பகல் என்றுமே நள்ளிருள் இல்லையே
துன்பமும் தோல்வியும் துளியுமினி யில்லையே!!

பழனி அழகு

85

அன்பைச் சுவைப்போம் அகவலிப் பெறுவோம்
துன்பம் களைந்து துயரம் மறப்போம்
மன்னித்துப் பகையை மறந்து வாழ்வோம்
இன்முகம் காட்டி இன்பம் கூட்டுவோமே!

யே. யூடி  எமெறென்சியா

86

அன்பு செய்தால் அகிலம் முழுதும்
துன்பம் விலகும்! தொல்லை மறையும்!
இன்பம் பெருகும் இதயம் மகிழும்
நன்மை விளையும் நாளும் தானே!

மாலதி திரு

87

அன்பை பொழிந்தே அன்னையைத் துதிப்போம்
துன்பம் மறக்கத் தொட்டிலை நினைப்போம்
தன்னிலை உயர தன்மானம் காத்து
மன்மதக் குஞ்சாய் மகிழ்ந் துதிப்போம்

காவத்தையூர் பழனியாண்டி ராஜா

88

கண்கள் காணும் காட்சிகள் மாறும்
உண்மை சொல்லும் உறுதி நிலைக்கும்
எண்ணம் போல எல்லாம் மாறும்
மண்ணில் அன்பால் மானுடம் நிலைக்குமே!

த. புவனேசுவரி

89

உயிரில் கலந்த உணர்வாய் அன்பு
பயிரென விளையும் பண்பும் உலகில்
உறவுகள் மேம்பட உதவும் நாளும்
அறமும் ஓங்கும் அறிவின் அழகே

பாக்கியலட்சுமி

90

எங்கும் பார்க்க ஏங்கும் அன்பு
தங்கம் போன்றே தரமாய் அன்பு
மின்னல் கீற்றாய் மெலிதாய் தாக்க
அன்பில் உருகி இன்பம் அடைவோமே!

அ. வேளாங்கண்ணி

91

உண்மை அன்பே உலகை ஆளும்
எண்ணம் போல  என்றும் வாழும்
கண்கள் பார்த்துக் கதைகள் பேசின்
விண்ணை எட்டும்  விந்தை செய்யும்

எம். றூஹுல்லா

92

விலையிலா அன்பு விதையினை விளைப்போம்
தலைநிமிர் காலம் தழைத்திட உழைப்போம்
இலையொரு துன்பம் இனியிவண் என்போம்
மலைபோல் வாழ்வில் மகிழ்ச்சி பெருகவே

கந்தநாதன் மஸ்கட்

93

அன்பினால் விரும்பும் அனைத்தும் அடையலாம்
துன்பங்கள் யாவையும் துடைத்தே எறியலாம்
இன்பம் அளித்திடும்  ஏற்றம் தந்திடும்
என்றும் வாழ்வினில் ஏத்துவோம் அன்பையே .

தம்பித்துரை குணத்திலகம்

94

அன்பினில் விளையும் அகமகிழ் வென்பேன்
இன்பந் தருமதும் எழுச்சியு மென்பேன்!
வெற்றியைத் தந்திடும் விருப்ப முந்தான்
சுற்றியுஞ் சொந்தஞ் சொர்க்கமென் பேனே!

வ. க. கன்னியப்பன்

95

அன்பை கலந்தே  இன்பம் கொடுப்போம்/
இன்முகப் பேச்சிலே  இனிமை கூட்டுவோம்/
வன்மம் விடுத்தே  வளமாய் வாழ்வோம்
தன்மானத் தமிழனாய்த்  தரணியில் சிறப்போம்

சுகுமார் கவி

96

தன்னை உணராத் தரணியின் மாக்களே
அன்பின் குறைவால் அறமும் குலையுதே
துன்பம் இழைத்திடத் துடிக்கும் உள்ளமே
அன்பே அனைத்தும் அறிந்தால் நலமே!

ஆ. முருகேசுவரி

97

அன்பால் உலகை ஆண்ட பெரியோர்
அன்னை புவியில் அருளின் கொடையால்
குன்றாப் புகழின் கூர்மதி தெளிவால்
மன்றம் வாழ்வார் மாணிக் கமாகவே.

சேந்தன்குடிச் செந்தமிழாழன், புதுக்கோட்டை.

98

அன்பி னுருவம் அம்மா அவள்பத
மென்றும் பணிவோ மிறையாய்த் தொழுதே
தன்னல மில்லாத் தாயைப் போற்றுவோம்
இன்முகங் காட்டுவோம் இன்பத் தோடே...

பைந்தமிழ்ப்பாமணி ஜோதிபாஸ் முனியப்பன்

99

இல்லறம் சிறக்க இலக்கணமா யிருப்பது
கல்மனம் கரையும் கருணை கொண்டது
சொல்லிடும் பொழுதே சுவையைக் கூட்டுவது
வெல்லுமே தொல்லுலகை வேதமாய் அன்பே

கோபால் சத்தியமங்கலம்

100

மண்ணில் பிறந்தே மறத்தை வளர்ப்போம்
விண்ணில் உயர்ந்து வியந்திட வாழ்வோம்
அன்புடன் மனதின் அறத்தில் நடப்போம்
என்றும் தமிழில் எதிலும் சிறப்போம்.

லீலா லோகநாதன்.

101

அகத்தில் மலர்ந்த அன்பை நாளும்
முகத்தில் காட்டி முறுவல் செய்தே
இகழ்தல் வெறுத்தே இனிமை சேர்க்க
நிகரு மேது நிலைத்த உலகிலே.

கு. மலர் செல்வி.

102

ஈகையில் சிறப்பது இன்பம் பயக்குமே
தூகை வாழும் தூக்கனாங் குருவியே
பாகை கொண்டு பாரினில் வாழுதே
சோகை காணச் சோர்ந்து வாழாதே

வாசன் சாவி சென்னை

103

தங்கம் பார்க்க தரத்தில் மின்னும்
அங்கம் நோக்க அறத்தில் உள்ளும்
மங்கும் பார்வை மறக்கா அன்பு
தங்கும் நினைவில் தளரா பண்பே.!

மைக்கேல்ராஜ்

104

தனத்தை நாடி தரத்தை இழக்கும்
சனத்தைப் போலச் சகத்தில் இருப்போரில்
மனத்தால் ஒன்றி மகிழ்ந்து சிறப்பதில்
உனக்குண்  டோநிகர் உலகில் பேரன்பே..!

கா. கி. சந்திரசேகரன்

105

அன்பே மௌனம் அன்பே கானம்
அன்பே பக்தி அன்பே ஞானம்
தன்னில் எல்லாம் தாங்கும் நிறைவே
தன்னை மறக்கும் தகைமை இறையே!

சாய்ரேணு சங்கர்

106

அன்பு கொண்ட அகமே மலர
இன்பம் பொங்கும் இனிமை தங்கும்
கள்ளம் அகலும் கருணை பிறக்கும்
உள்ளம் நிறையும் உலகம் தழைக்குமே

திருமதி மாலினி கெனடி

107

கனியும் அன்பில் கவிதை தோன்றும்
இனியும் தேவை இதய ராகம்
உதய மாகும் உறவு வளரும்
அதுவே உலகில் அறமாய்த் திகழுமே

இரா. பேச்சியம்மாள், கரிசல் கானம்

108

அன்பெனும் வடிவிலே அற்புதம் செய்வோம்!
இன்சொல் கனிய எழிலாய் வாழ்வோம்!
சொல்லறங் கொண்டு சுகத்தைப் பெருக்குவோம்!
நல்லற மதுவே! நன்மொழிச் சொல்லே!

செ.நிறைமதி, மதுரை

109

அன்பே என்றும் அகிலம் ஆளும்
நன்றே செய்திட நிம்மதி தோன்றும்
இன்னல் தீர்க்க இனியவை நிகழும்
என்றும் அன்பு ஏற்றம் தருமே !

க. தங்கவேலு.கிருட்டிணகிரி

110

அன்பே இந்த அகிலத்தின் ஆதாரம்
இன்பம் அங்கே ஏற்படும் விளைவு
துன்பம் என்பதை துரத்தி ஓட்டி
நின்று தந்திடும் நிலையான நேசமே

கண்ணன் நடராஜன்

111

வன்மம் காமம் வக்கிரம் இன்றி
கன்னல் சுவையாய்க் கனிந்திடும் மொழியால்
அன்பெனும் ஆயுதம் அகிலம் ஆண்டால்
இன்னல் உண்டோ இச்சக வாழ்விலே

மங்களரூபி ஜெகதீஸ்வரன்

112

கட்டுக் கடங்காதார் கைக்குழந்தை ஆக
விட்டுக் கொடாதார் விட்டில் பூச்சியாக
முட்டுக் கட்டையாவும் முறிந்து வீழ்ந்திட
மட்டற்ற மகிழ்ச்சி மண்ணில் அன்பினாலே

முருகன் ஊர்க்காவலன்

113

என்றும் தொடரும் எப்போதும் நிலைத்திடும்//
இன்பம் தந்திடும் இதயம் விரும்பிடும்//
துன்பம் போக்கிடும் துணையாக வந்திடும்//
அன்பொன் றைத்தான் அனைவரும் தேடுவதே

இரமேசு ரவிச்சந்திரன், சென்னை

114

அன்பு கொண்ட அகத்தின ராகி
இன்ப முடனே என்றும் வாழ்வோம்
வன்ம மகற்றி வாழ்ந்திட நாமும்
என்றும் உலகில் ஏற்றம் தானே.

த. கி. ஷர்மிதன் இலங்கை

115

அன்பே நம்மொழி அன்பே நம்வழி
அன்பே உயர்பண்பு அன்பே நல்லறம்
அன்பே பெரும்சிவம் அன்பே அருட்தவம்
அன்பே அகிலம் அறிந்துவாழ் வோமே.

முத்துராமன்

116

வாழும் உலகில் வரமே நீதான்
ஏழு பிறப்பும் எம்மைத் தொடர்ந்து
பாழும் விதியின் பாதை மாற்றித்
தாழும் எம்மைத் தாங்கி நிற்பாயே.

ஔவை

117

மயக்கும் செயல்கள் மட்டிலா இன்பமாம்
பயக்கும் அறங்களைப் பகிர்ந்து மகிழ்வோம்
வியக்கும் விந்தை விதைத்துக் களைப்போம்
இயக்கும் மூலமாய் இருப்போம் என்றுமே

வேங்கடலட்சுமி ராமர்

118

பிறப்பிலே அன்பு பிறக்க வேண்டும்//
சிறப்புச் செயலே சிந்தனை தூண்டும்
உயிராய் வாழும் உறவை நேசி//
உயிரே உன்னதம் உண்மை அன்பே.

சசி முத்து கருமாத்தூர், மதுரை

119

அன்பும் அறமும் அமுதாய் நிறைய
இன்பம் வாழ்வில் என்றுமே நிலையாம்
நன்றே இதனை நாளும் தொடர
குன்றா நலமது குறைவிலை காணே

மீராஸ்ரீ

120

துன்பம் மறந்து துள்ளிக் குதித்து
வன்மம் தவிர்த்து வல்லமை பெறுவோம்
அன்பில் திளைத்து அழகாய் வாழ
என்றும் வெற்றி எளிதில் கிட்டுமே

தி. இராஜபிரபா

121

தேனிகொடுக்கக் கொடுக்கக் குறையாத அன்பில்
வெடுக்கென மறைந்தே விலகிடும் பகைமை
இடுக்கண் வருங்கால் இதமாகும் அன்பும்
துடுப்பென மாறியே துயர்களை நீக்குமே!

ஜெயசக்தி பிரபாகரன்

122

அன்பி ருந்தால் அகிலமும் கைக்குள்
மண்ணில் பிறக்கும் மாக்களும் மனத்துள்
இதயமும் இனிக்கும் இனிய சொற்களால்
உற்சாகம் தருமே உறவின் வரவுகளே

நாகை குமரன்

123

அன்பின் வழியில் அகிலம் வெல்வோம்
இன்பம் பொங்கும் இதயம் வளர்ப்போம்
ஒன்றாய்ச் சேர்ந்தே ஒற்றுமை பேணுவோம்
நன்மை கூடி நானிலம் செழிக்குமே

புஷ்பகலா ரவீரதன்

124

அன்பைப் பகிர்ந்தே அனைவரும் மகிழ்வோம்
இன்புறப் பாடி இறைவனைத் தொழுவோம்
நன்மையை எண்ணும் நல்ல மனமேகி
என்றுமே உலகில் எல்லோரும் வாழ்வோமே.

சிவம் முத்து

125

நன்னாள் இன்றே நல்லதை செய்வோம்
இன்பம் காண இரக்கம் கொள்வோம்
என்றும் பகைமை ஏற்றம் தராதே
அன்பை பொழிய அகிலம் சிறக்குமே

ந. மணிமாறன்

126

அன்பைக் கொண்டே அகிலம் ஆண்டிடு
நன்மையும் செய்தே நலமும் வளர்த்திடு
வன்மையும் விட்டே வளமும் நிறைத்திடு
இன்முகம் காட்ட இனிதாகும் இல்லமே

மகேஸ்வரி கிருஷ்ணசாமி

127

ஆடிக் களிக்கும் அன்பைச் சொரியும்
கூடிக் குலவும் குழவிச் செல்வம்
தேடிப் பிடித்துத் தீஞ்சுவைப் பெறவே
வாடிக் கழியும் வாழ்வு மீளுமே

பா. ச. கண்ணன்

128

வாழ்வில் மகிழ்ந்து வளமாய் வாழ்வோம்
தாழ்வே இல்லாத் தகைமை கொள்வோம்
ஆழ்ந்த அறிவால் அகிலம் வெல்வோம்
சூழ்க இன்பம் சுற்றமும் போற்ற.

பாவலர் பஃக்ருத்தீன், பரங்கிப்பேட்டை

129

அன்பால் கண்டேன் அற்புதக் காட்சி
இன்பம் கொண்டேன் இதயம் மயங்கி
வன்முறை இன்றி வாழ்வு சுகமாகப்
பொன்னெனக் கொள்வாய் பொறுமை நெஞ்சே!

கவிஞர் கவிதா அசோகன் திருச்சி

130

அரும்பும் அன்பை அணியாய் அணிவோம்
விரும்பும் கனிச்சொல் விரும்பி விதைப்போம்
பெருகும் மழையாய்ப் பேரன்பைப் பொழிவோம்
நெருங்கியோர் அணைப்போம் நெஞ்சத்(து) அன்பாலே!

நளினா கணேசன்

131

அன்பெனும் ஆழியுள் அகிலமே அடங்கும்!
மன்பதை துயரினை மனங்கொளப் பொறுக்குமோ?
துன்பமும் தனதெனத் துடித்துடல் துவண்டிடும்!
என்பையும்  ஈந்திட எண்ணி விரையுமே!

கோவிந்தம்மாள் இரத்தினம்

132

அன்பின் வழியில் அகிலம்  மதிக்க.
நன்றாய் இன்பம் நாளும் சமைப்போம்.
என்றும் தமிழும் ஏற்றம் பெறவே.
ஒன்றாய் உழைத்தே உயர்வைக் காண்போம்.

சுப. கல்யாணம்..

133

பெண்ணைக் கண்டேன் கவிதை பிறந்தது
கண்ணைப் பார்த்தேன் காதல் வந்தது
விண்ணில் பறந்தேன் வியந்து போனேன்
மண்ணில் பிறந்ததை மறந்து போனேன்

சு. பசுங்கிளி, திருநெல்வேலி

134

அறமென் றுரைத்தால் அன்பே நிற்கும்
அறத்தை வளர்த்தே அன்பும் செழிக்கும்
அறிந்து இதனை அகத்தில் விதைத்தால்
அறத்தின் வழியே அகிலம் வாழும்

பேனாவின் தோழி பிந்து, சத்தியமங்கலம்.

135

அன்பைக் கலந்தே அறத்தை வளர்ப்போம்
இன்முகம் கொண்டே என்றும் வாழ்வோம்
கன்னித் தமிழின் காதல ராகி
நன்மை வளர்த்தே நாம்சிறப் போமே

இராம வேல்முருகன், வலங்கைமான்.

# அன்பு



அன்பெனும் ஆயுதம் அணைக்கும் நாளும்
பண்பென வளர்த்துப் பழகுதல் நன்றாம்
பொன்னென வாழ்க்கை புதுமையாய் அமையும்!
மண்ணினில்  ஒளிரும் மாண்பே வாழ்க!

தமிழ்நெஞ்சம் அமின்